**ஜெய் ஸ்ரீ கிருஷ்ண ஞானதேவா**
**ஜெய் ஸ்ரீ கிருஷ்ண ஞானதேவா**

**என்குரு ஞானதேவர் எனக்கு கற்றுக்கொடுத்த ஞானத்தினாலும், பக்தியினாலும் நான் புரிந்து கொண்டதை, நான் அனுபவித்ததை**
**என் குருநாதனின் பாதம் பணிந்து சமர்ப்பிக்கிறேன்.**
**ஸ்ரீகாந்த்**

# கிருஷ்ண உணர்வு

ஒரு மனிதனின் மகிழ்ச்சி என்பது அவன் மனதிலே எண்ணுகின்ற எண்ணத்தில் அல்லது நினைக்கின்ற நினைப்பில் இருக்கின்றது. உதாரணமாக பாம்பை கயிறு என்று நினைத்தால் நிதானமாக இருப்போம். மாறாக கயிற்றைப் பாம்பு என்று நினைத்தால் நெஞ்சம் படபடத்து துன்பப்படுவோம்.

இதில் உண்மை ஒன்றாக இருக்க, நம் அனுபவம் வேறு ஒன்றாக இருக்கின்றது. இந்த அனுபவங்கள் நமக்கு நிரந்தரமாக நீடிப்பதில்லை. காரணம், உண்மை வெளிப்படும்போது , நம் அனுபவம் மாறிப் போய் விடுகின்றது. மேலும் கயிற்றை கயிறாகவே பார்த்தாலும் மற்றும் பாம்பை பாம்பாகவே பார்த்தாலும் கூட நம் அனுபவம் நீடித்து இருப்பதில்லை. காரணம் கயிறும் பாம்பும் நிரந்தரமல்ல.

பொதுவாக இந்த உலகத்தில் எந்த சுகமும் துக்கமும் நிரந்தரமாக நீடிப்பதில்லை. காரணம், இந்த உலகில் எதுவுமே நிரந்தரமில்லை. இந்த இடத்தில் பாம்பு - கயிறு என்பதற்கு பதிலாக கெட்டவன் - நல்லவன் என்று பொருத்திப் பார்த்தால் இந்த உண்மை உங்களுக்கே விளங்கும். அதாவது, ஒருவன் நல்லவனாக இருந்தும் நீங்கள் கெட்டவனாக பார்த்திருக்கலாம் அல்லது அவன் கெட்டவனாக இருந்தும் நீங்கள் நல்லவனாக பார்த்திருக்கலாம். ஆனால், இந்த உண்மை தெரியும்போது அனுபவம் மாறிவிடும். மேலும் நீங்கள் சரியாகவே நல்லவனை நல்லவன் என்றும், கெட்டவனை கெட்டவன் என்றும் பார்த்திருந்தாலும் கூட நல்லவன் கெட்டவனாக மாறிவிட வாய்ப்புண்டு, கெட்டவன் நல்லவனாக மாறிவிட வாய்ப்புண்டு. இந்நிலையில் கண்டிப்பாக நமது அனுபவங்கள் நிரந்தரமாக ஒரே மாதிரியாக இருக்க வாய்ப்பே இல்லை.

நிரந்தரமான மகிழ்ச்சியை பெறுவதற்கு, நிரந்தரமாக இருக்கும் ஒன்றினை நாம் முழுமையாய் புரிந்து கொள்ள வேண்டும். மண்ணினால் ஆன பொம்மைகள்

மாறிக்கொண்டே இருந்தபோதிலும் , மண் எப்போதும் மாறாமல் இருப்பது போல, மாறிக்கொண்டே இருக்கும் இந்தப் பிரபஞ்சத்தின் மூலம் எது? என்று கண்டறிய வேண்டும். பின்பு நமது எண்ணங்களையும் நினைவுகளையும் இந்த மூலத்தை மையமாக வைத்து அமைப்போமேயானால் நிரந்தரமான மகிழ்ச்சி கண்டிப்பாக உறுதியாகும். இந்தப் பிரபஞ்சத்தின் மூலத்திற்கு நாம் கொடுக்கின்ற பெயர்தான் இறைவன். இதையே நீங்கள் கிருஷ்ணன் என்றும், அல்லாஹ் என்றும், கிறிஸ்து என்றும் எடுத்துக்கொள்ளுங்கள்..

இறைவன் யார்? இறைவனை உணர்வதால் ஏற்படும் நன்மை என்ன? பக்தி உணர்வு அல்லது பேரானந்த உணர்வு என்றால் என்ன? இறைவனை உணர்வது எளிதா? கடினமா? இந்த வினாக்கள் அனைத்திற்கும் விடை தெரிந்து கொண்டு இறை உணர்வில் திளைத்து இறைவனாகவே மாறுவதற்கு இந்தப் புத்தகம் நமக்கு உதவும்.

## ***இறைவன் யார்?***

இறைவன்- நண்பன், காதலன், குரு, அன்பின் திருவுருவம், கள்வன், பொய் சொல்பவன், விஸ்வரூபன், காணும் இடமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் தேஜோமயானந்தன், அணுவிற்கு அணுவாய், அப்பாலுக்கு அப்பாலாய் இருப்பவன், ஆதி அந்தம் இல்லாதவன், குணாதீதனாய் குணங்கள் அற்றவனாய் இருந்தும் அனைத்து நல்ல மற்றும் கெட்ட குணங்களுமாய் காட்சி அளிப்பவன். உருவற்றவனாய் இருந்தும் எல்லா உருவங்களுமாய் காட்சியளிப்பவன்.

மேலே குறிப்பிட்டவை அனைத்தும் உண்மை என்றாலும் இவற்றை புரிந்து கொள்வது தான் நமது முதல் தலையாய கடமை. ஏனெனில் கிருஷ்ணனை முழுமையாகப் புரிந்து கொள்ளாவிடில் அவனிடம் அன்பும் காதலும் ஏன் எந்த உணர்வுமே வராது.

பகவத்கீதையில் இறைவன் யார்? என்பதை மிகவும் விளக்கமாகவும் அற்புதமாகவும் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. முதலில் நாம் அதை புரிந்துகொண்டு இறைவன் யார்? என்று கேள்விக்கு கொடுக்கப்பட்ட அந்த எல்லா பதில்களையும் முழுமையாக புரிந்து கொள்ள முயற்சிப்போம்.

இறைவன் வேதங்கள் வாயிலாக பேசுகிறார்,"பரப்பிரம்மம், பரமாத்மா, சச்சிதானந்த ஸ்வரூபம் என்று வேதங்கள் அழைக்கப்படுகின்ற சக்தி வாய்ந்த நான், உருவம் இல்லாதவன், குணம் இல்லாதவன், ஏன் எண்ணங்களே கூட இல்லாதவன், எப்போதும் இருப்பவன், சாஸ்வதமானவன். இதுவே என் நிஜ சொரூபம்.

மேலும், இயற்கையில் ஆனந்த ஸ்வரூபியாக இருந்தபோதிலும் எனது மகா சக்தியை பயன்படுத்தி ஒரு fun க்காக, உத்தேசம் ஏதுமின்றி ஒரு விளையாட்டு

விளையாடலாம் என்று நினைத்து, மாயையாக (உண்மை போல் தெரியும் ஆனால் உண்மையாக இருக்காது. உதாரணமாக, நண்பர்களுக்கு இடையிலான மல்யுத்த விளையாட்டில் உண்மையில் சண்டையிடுவது போல் தோன்றினாலும் அது உண்மையாகாதது போல), உண்மையில் உருவமில்லாத நானே பல லட்சக்கணக்கான உருவங்களாகவும், (பஞ்ச பூதங்களாகவும் பின் அதன் அடிப்படையில் ஆண், பெண், மிருகங்கள், பறவைகள், மரங்கள், செடிகள், கொடிகள், பாலைவனங்கள், சோலை வனங்கள் etc.), உண்மையில் எந்த குணங்களும் இல்லாத நானே பல்வேறு குணங்களுடன் கூடியவனாகவும் (நல்லவன், கெட்டவன், பைத்தியக்காரன் etc.), ஆதி அந்தமில்லாத என்னைஆதி அந்தம் உடையவனாகவும், அப்பாலுக்கு அப்பாலாய் இருக்கும் என்னையே அணுவிற்கு அணுவாகவும், எண்ணங்கள் இல்லாத நான் எண்ணங்களுடன் கூடியவனாகவும், ஒரு தோற்றத்தை ஏற்படுத்திக் கொண்டு விளையாடிக் கொண்டிருக்கின்றேன்". என்று இறைவன் வேதத்தின் வாயிலாக தெளிவாகக் கூறியிருக்கின்றான்.

இதற்கு மேல் நீங்கள் படிக்கும் ஒவ்வொரு வரிகளும் ஒரு சாதகன் அல்லது ஒரு பக்தன் இறைவனுக்கு கிருஷ்ணன் அல்லது கண்ணன் என்று பெயர் வைத்துக்கொண்டு அவனை எவ்வாறு புரிந்துகொண்டு அனுபவிக்கின்றான் என்பதை அவன் வாயிலாகவே சொல்லப்போகின்றான்.

# ***<u>பக்தனின் புரிதலும் உணர்தலும் அனுபவங்களும்.</u>***

"நான் புரிந்து கொள்ள வேண்டிய முக்கியமான உண்மை யாதெனில்,

## 1. ***அனைத்தும் கண்ணன்:***

இந்த உலகம் இந்த கிருஷ்ணனின் மாயத்தோற்றம் என்றும், கண்ணனே பொய்யாக ஆயிரமாயிரம் ரூபங்களில் என் முன்னே வலம் வருகின்றான் என்றும், பிரபஞ்சம் முழுவதுமே கிருஷ்ணனைத் தவிர வேறு அல்ல என்று புரிந்து கொள்வதோடு மட்டுமல்லாமல் எனக்குள்ளிருந்து என்னை இயக்குவதும், எனக்கு சக்தி அளிப்பதும், அவனே என்றும் புரிந்து கொண்டேன்.

## ***2 . எனக்கு மட்டும்தான் அறியாமை:***

அடுத்து மிக முக்கியமாக நான் புரிந்துகொண்டது, நானும் அவனே என்பது உண்மை என்றாலும் கூட, அதை அனுபவபூர்வமாக உணராத காரணத்தினால் நான் மட்டுமே அறியாமையில் இருக்கின்றேன் என்று உணர்ந்து, இவ்வுலகத்தில் உள்ள மற்ற அனைவருமே அந்த கிருஷ்ணனே! விளையாட்டிற்காக பல நல்ல, கெட்ட வேஷம் எடுத்துக் கொண்டு என்னோடு விளையாட வந்திருக்கின்றான் என்று புரிந்து கொண்டு, கிருஷ்ணன் விளையாட்டிற்காக எடுத்துள்ள மற்ற <u>வேஷங்களை உண்மை என்று பாவிக்க மாட்டேன்</u>.

## *3. என்னை இயக்குவதும் அவனே!*

மேலும், நானும் கிருஷ்ணனே என்று உணராத நிலையிலும் கூட எனது எண்ணத்திற்கு ஏற்ப என்னை இயக்குவது அவனே!! என்று உணர்கிறேன். அதுமட்டுமில்லாமல் கலியுகத்தில் அஞ்ஞானிகளே அதிகம் என்ற கூற்றினை நான் எடுத்துக்கொள்ள மாட்டேன். காரணம், அஞ்ஞான வேஷங்களால் ஏற்படும் அனைத்துக்கும் கண்ணன் பொறுப்பில்லை என்ற போதும், இந்த ஸ்ரீ கிருஷ்ணனின் அனுமதியின்றி எதுவும் நடக்காது. என் கர்மாவின் படி எப்போது எது எனக்குத் தரவேண்டும் என்பதை தீர்மானிப்பது கண்ணனே எனும்போது, மற்றவர்களை வெறும் அஞ்ஞானிகளாக காணாமல் கிருஷ்ணன் அஞ்ஞான வேஷத்தில் வந்துள்ளான் என்று தான் காண்பேன். ஏனெனில், அவனன்றி அணுவும் அசையாது என்பது உண்மையல்லவா. மேலும் இந்த புரிதலின் காரணமாக நான் மற்றவர்களைவிட பெரியவன் (EGO) என்று நினைத்தால் அது என் இறைவனிடமே ஈகோ காட்டியதற்கு சமம் என்ற ஆகிவிடுவதால் எனக்கு ஈகோ எழ வாய்ப்பே இல்லை.

## *5. என்னை மகிழ்விக்கவே அவன் வந்துள்ளான்:*

அடுத்து நான் புரிந்து கொண்டது, பிரபஞ்சமாக மாறிய என் கிருஷ்ணனின் ஒரே நோக்கம் ஒவ்வொரு நொடியும் என்னை மகிழ்விக்க வேண்டும் என்பதைத் தவிர, வேறு எந்த நோக்கமும் கிடையாது. குறிப்பாக பல விதமான சுவைகளில் என்னை மகிழ்விக்க வேண்டும் என்பதற்காகவே பல்லாயிரக்கணக்கான வேஷங்களில் என்னோடு விளையாட வருகின்றான். விளையாட்டு என்றாலே எதிரணி என்று கண்டிப்பாக இருக்க வேண்டும். என் கரம் கோர்த்து விளையாடுவதற்கும் சரி, என்னை எதிர்த்து விளையாடுவதற்கும் சரி, என் ஆருயிர் கண்ணனே என்னை மகிழ்விப்பதற்காக விளையாட வருகின்றான் என்பதை புரிந்து கொண்டேன். இந்த வாழ்க்கை எனும் விளையாட்டில் எதிரிகளாக வருபவர்களும் கூட என் கண்ணனே என்று எண்ணும் போது, கொஞ்சமும் அன்பு மாறாமல் வெறுப்பு இல்லாமல் நான் எதிர்க்க வேண்டிய இடத்தில் மகிழ்ச்சியாக எதிர்த்து விளையாடுவேன்.

### *6. CORE and ROLE:*

என் கண்ணனை நன்கு புரிந்து கொள்வதற்காக, அப்பழுக்கற்ற, மாசற்ற, அன்பின் சிகரமான என் கண்ணனே CORE ஆகவும் (அடிப்படையாகவும்), பின் அவனே பல நல்ல, கெட்ட குணங்களுடன் கூடிய ROLE ஆகவும்(வேஷமாகவும்) வருகின்றான் என்று புரிந்துகொண்டு, கண்ணனே (CORE ஆக) அனைத்துமாக இருக்கின்றான் என்பதை மறவாமல், அவன் எடுத்துக்கொண்ட வேஷத்திற்கு (ROLE க்க்கு) ஏற்றார் போல் நான் அவனோடு விளையாடி மகிழ வேண்டும் என்பதை புரிந்து கொண்டேன். மேலும் இந்த CORE மற்றும் ROLE இவ்விரண்டிற்கும் சமஅளவு முக்கியத்துவம் தரும்போது தான், நிரந்தரமான

ஆனந்தத்தை அனுபவிக்க முடிகிறது என்பதையும் புரிந்துகொண்டேன். ஏனெனில் CORE ஐ மறந்து ROLEஐ மட்டும் பார்த்தால், கண்ணனை மறந்து இது வெறும் விளையாட்டு (மாயை) என்பதையும் மறந்து, அகங்காரம், விருப்பு, வெறுப்பு, பொறாமை என்று எல்லா அசுர குணங்களும் என்னில் தொற்றிக்கொண்டு, விளைவாக பயம், பதட்டத்துடன் வாழவேண்டி வருகின்றது. அதே போன்று ROLEஐ மறந்து COREஐ மட்டும் பார்த்தால் கண்ணனையும், இது வெறும் மாய விளையாட்டு என்பதை புரிந்து கொண்டாலும், அதன் விளைவாக அன்பும் ஆனந்தமும் குறையவில்லை என்றாலும், யாருடன் எப்படி விளையாட வேண்டும் என்று மட்டும் தெரியாமல் போகும்.

### *7. COREஐ ஒருபோதும் மறக்க மாட்டேன்:*

மேலும் ஜென்ம ஜென்மமாக ROLE ஐ (வேஷங்களை) மட்டும் பார்த்து பழகியதால் ROLEஐ, வேஷங்களை, என்னால் சுலபமாக புரிந்து கொள்ள முடியும். ஆனால் அடிப்படையில் கண்ணன் தான் அந்த வேஷத்தில் வருகின்றான் என்பதை நான் இத்தனை ஆண்டுகளாக மறந்துவிட்டதால், அந்த ROLE அனைத்தும் கண்ணனே என்று அந்த COREற்கு அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்பதையும் உணர்ந்துகொண்டேன். ROLEக்கு முக்கியத்துவம் தரவில்லை என்றாலும் பரவாயில்லை CORE ஐ ஒருபோதும் விட்டுவிடக் கூடாது, இது மிக மிக முக்கியம்.

## ***பக்தி உணர்வு என்றால் என்ன?***

கண்ணன் யார் என்பதையும், விஸ்வரூபமாக அவன் விரிந்ததே என்னிடம் அன்பு காட்டி என்னை மகிழ்விக்கவே என்ற உண்மையும் புரிந்த போது, என் மனம் இயற்கையாகவே கிருஷ்ணனுடைய அன்பிலே மயக்கம் கொண்டது.

நான் அவனது ஒரு துளியாய் இருந்தபோதிலும், அந்த உண்மையை முற்றிலும் மறந்து விட்டு அகங்காரத்தில் அல்லல்பட்டு கொண்டிருக்கும்போது, பிரம்மாண்ட நாயகன், பேரானந்த உணர்விலே எப்போதும் திளைத்துக் கொண்டிருக்கும் கண்ணன், அவனது ஒரு துளியான என்னில் ஏற்படும் பாதிப்பு அவனுக்கு எந்த இழப்பையும் ஏற்படுத்தாத போதிலும் ( சமுத்திரத்தில் இருந்து ஒரு துளி தண்ணீர் விலகுவதால் சமுத்திரம் எந்த இழப்பும் அடையாதது போல்), இந்த அற்பமான நான் கண்ணனை மறந்து படும் வேதனையை பொறுத்துக் கொள்ளாமல் என்னை யார் என்று உணர்த்துவதற்க்கும், எனக்கு பல்வேறு சுவைகளை கொடுத்து, என்னை மகிழ்விப்பதை மட்டுமே ஒரே நோக்கமாக கொண்டிருக்கும் அவனது அன்பை காணும் போது மயங்காமல் இருக்க முடியுமா? பஞ்ச பூதங்களாக அவன் இருந்து கொண்டு, எதையும் எதிர்பார்க்காமல் அவன் காட்டும் அன்பை வர்ணிக்க வார்த்தையில்லை. சில நொடிகள் காற்று இல்லாமல் நான் வாழ முடியுமா? நீராய் அவன் பொழியும்

அன்பில் என்னை நனைத்து குளிர வைக்கின்றான்!! நிலத்தில் ஒரு விதை விதைத்தால் அதை ஆயிரம் மடங்காக மாற்றித்தரும் ஆச்சரியம்!!! நெருப்பாய், சூரியனாய், ஆற்றல் அனைத்திற்கும் மூலமாய்!! மேலும் அனைத்திற்கும் இடம் தரும் ஆகாயமாய்!! அப்பப்பா அவனது அன்பை எப்படி வர்ணிப்பது? இது மட்டுமா . என் உடலாய், உடலின் உறுப்புக்களாக இருந்துகொண்டு, இடைவிடாது நான் தூங்கினாலும் இதயம், நுரையீரல் என எல்லா உறுப்புக்களையும் எனக்காக இயக்கிக் கொண்டு, நான் தகாத உணவை உட்கொண்டாலும் நோய் எதிர்ப்பு சக்தியாக இருந்து, இப்படி அவன் காட்டும் அன்பிற்கு ஈடு இணை அவனே.

இப்படியே அவனது அன்பை நான் அனுபவிக்க அனுபவிக்க, அவனது அன்பாக மாற என் மனம் துடித்தது. இத்தனை நாளாக நான் அனுபவித்தது அனைத்தும் அவனைத் தான் என்றாலும் அதை உணராததால் வீண்பட்டுப் போனேன். கண்ணன் யார் எனப் புரிந்துகொண்டு, அவன் அன்பை உணர்வதே பக்தியின் முதல் பரிணாமம் என்பதை புரிந்து கொண்டேன்.

சச்சிதானந்த ஸ்வரூபன், பேரறிவாளன், அனைத்துமாய் இருப்பவன், எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் எனக்கே எனக்காக இருக்கின்றான் என்று புரிந்த பிறகு, என் மனம் தானாகவே என் கண்ணனுக்காக வாழ்வதே வாழ்க்கை என்று நினைக்க ஆரம்பித்தது.

ஒவ்வொரு நொடியும் எனக்காக பார்த்து பார்த்து கொடுத்து உதவும் என் கண்ணனுக்கு, நான் எப்படி என் அன்பை கொடுப்பது என்று சிந்திக்கும்போது, கொடுப்பதற்கு ஏதுமின்றி தவித்தேன். காரணம், என்னிடம் இருப்பதெல்லாம் அவன் கொடுத்ததே. மேலும் அவனிடம் இல்லாதது என்று எதுவுமே இல்லையே!!. ஆனாலும் ஒன்றை கண்டறிந்தேன், என்னிடத்தில் மட்டுமே இருப்பது, அவனுக்கு மிகவும் பிரியமானது, அதை கொடுத்து மகிழ்வது என்று முடிவு செய்தேன். ஆமாம், அது என்னுடைய மகிழ்ச்சி மட்டுமே. நிரந்தரமாக எப்போதும் நான் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்ற ஒரே ஒரு ஆசை என் கண்ணனுக்கு இருக்கின்றது. அதை என்னால் நிறைவேற்ற முடியும் என்று புரிந்து கொண்டபோது, தீர்மானமாக ஒரு முடிவுக்கு வந்தேன். இறைவனிடம் பிரார்த்தித்தேன்," கண்ணா இன்று முதல் என் வாழ்க்கையில் ஒவ்வொரு நொடியும் பல்வேறு விதமான இன்னல்களையும் கஷ்டங்களையும் கொடுக்கும் கடினமான, சவாலான விளையாட்டுக்களை மட்டுமே என்னோடு விளையாட வா. அனைத்தும் நீ என்றும், இது உன் மாய விளையாட்டு என்றும் முழுமையாக புரிந்துகொண்டு கண்டிப்பாக நான் அதை ஆனந்தமாக அனுபவிப்பேன்", என்பதே அது..

ஏனெனில் ஒரு தாய் தன் குழந்தைக்கு கஷாயத்தை கொடுக்கும்போது, அந்த குழந்தை அது எத்தனை கசப்பாக இருந்தாலும் தாயன்பை உணர்ந்து, புரிந்து கொண்டு, கஷாயத்தை சிரித்துக்கொண்டே ஆனந்தமாக பருகினால் அந்த தாய்க்கு எத்தனை மகிழ்ச்சி ஏற்படும். ஆதலால் எனக்கு எல்லாமுமாக

இருக்கும் என் கண்ணனை இவ்வாறாக நான் மகிழ்விப்பது என்று முடிவெடுத்தேன்.

நான், எனது, என்பதை மறந்து என் கண்ணனின் மகிழ்ச்சியே என் மகிழ்ச்சி என்று நான் உணர்ந்தேன்.

இதையே கண்ணன், பக்தியின் முதிர்ந்த நிலை என்றும் சரணாகதி என்றும் கீதையில் சுட்டி காட்டியதாக உணர்ந்தேன்.

அன்று முதல், நான் கண்ணனை எப்படியெல்லாம் அனுபவிக்கின்றேன் என்பதை அடுத்து சொல்லப் போகின்றேன்.

## ***பூமி ஏன் சுற்றுகிறது?***

ஒருநாள் கண்ணன் என் நண்பனின் மகள் வடிவில் வந்து என்னிடம்," மாமா பூமிப்பந்து ஏன் சுழல்கிறது" எனக் கேட்டாள். அனைத்தும் கண்ணனாக காணும் நான் கண்ணன் ஏன் சுழல்கின்றான் என்று சிந்தித்தபோது என்னுள் எழுந்த உணர்வுகள்.

"கண்ணா, உன் செய்கை ஒவ்வொன்றிலும் என் மகிழ்ச்சியின் உத்தேசமே இருக்கும் என்பதை நான் அறிவேன். நீ எதற்காக பூமியாய் இருந்துகொண்டு இடைவிடாமல் சுழன்று கொண்டிருக்கின்றாய்? மேலும் பூமியாய் இருக்கும் நீ ஏன் சுழன்றுகொண்டே சூரியனையும் சுற்றி வருகின்றாய்? என்று நான் சிந்தித்தபோது, உனது அன்பு எனக்கு பிரமிப்பூட்டுவதாக இருக்கிறது. கண்ணா, ஒருவேளை பூமிபந்து சுழலாமல் அப்படியே பகல் 12 மணி அளவில் நின்று இருக்குமேயானால், அந்த ஒரே ஒரு நிலை மட்டுமே வாழ்நாள் முழுவதும் அனுபவிக்க வேண்டி வரும். அது எனக்கு bore அடித்து அனுபவிக்க சிரமப்படுவேன் என்று உணர்ந்தே ஒரு ஒரு நொடியும் எனக்கு விதவிதமான தட்பவெட்பநிலை களுடன் அதிகாலை, பகல்,அந்திமாலை, இரவு என மாற்றி மாற்றி கொடுத்து என்னை மகிழ்விக்கவே ஓய்வில்லாமல் இடைவிடாது எனக்காக சுழன்று கொண்டிருக்கின்றாய் என்று எண்ணி மகிழ்கிறேன். இல்லையெனில் அதிகாலையை ரசிக்க நான் வேறொரு நாட்டுக்கு விமானம் (ஏரோபிளேன்) ஏறி போகவேண்டும். அங்கும் அதிகாலையை மட்டுமே ரசிக்க முடியும். இப்படி ஒரு ஒரு நிலைக்கும் ஒவ்வொரு நாட்டுக்காக நான் நேரில் போய் சிரமப்பட வேண்டாம் என்று எனக்காக நீயே பூமியாகி சுழன்று கொண்டிருக்கின்றாயோ கண்ணா. ஒவ்வொருநாளும் உன்னையே ஒரு முறை சுற்றி வந்து, பல விதமான தட்ப வெட்ப மற்றும் ஒளி நிலைகளில் பல சுவைகளை தந்து மகிழ்விக்கும் கிருஷ்ணா, இதுவெல்லாம் போதாதென்று மேலும் உன்னை சுற்றிக்கொணடே சூரியனையும் சுற்றிக் கொண்டிருக்கின்றாய்?? ஏன் என்று கேட்டால், ஒவ்வொரு மூன்று மாத இடைவெளியில் ஒவ்வொரு சீசன் களை மாற்றி மாற்றி கொடுத்து, அவற்றை நான் அனுபவிக்க வேண்டும் என்பதற்காக என்கிறாய். எந்த பிரயோஜனமும்

இல்லாத எனக்கு இப்படியெல்லாம் கூட அன்பு காட்டுவாயா? கண்ணா!!" என்று எண்ணி வியக்கிறேன்.

## ***கிருஷ்ணன் ஏன் மாயையாக இந்த உலகத்தை உருவாக்கி விளையாடி வருகின்றார் ?.***

"என் இறைவா.. உண்மையில் சண்டை போடுவதுபோல் தோற்றமளிக்கும், ஆனால் உண்மையாகவே சண்டை போடாமல் இருக்கும் விளையாட்டை போலவும் , மற்றும் உண்மை போல் தோற்றமளிக்கும் ஆனால் உண்மையாக இல்லாது இருக்கும் திரைப்படம் போலவும் இருந்தால்தான் நான் ஆனந்தமாய் இருக்க முடியும் என்பதால்தான் இவ்வுலகையே மாயா (புலன்களுக்கு இருப்பதுபோல் தோன்றி ஆனால் உண்மையில் இல்லாதிருப்பது) ரூபமாக படைத்தாயோ?, ஏனெனில் திரைப்படங்களில் எத்தனை கொடூரமான கேரக்டர் என்றாலும் கூட (உதாரணமாக திரைப்படத்தில் சத்யராஜ் வில்லனாக வரும் போதும் கூட அனைத்து மக்களும் அதை ரசித்தனர்) என்னால் ரசிக்க முடிகின்றது.

மேலும் ஏதேனும் ஒன்று நிலையாக அப்படியே இருந்து விட்டால் அது நம்மால் ரசிக்க முடியாது, bore அடித்து விடும் என்பதால் தானோ இவ்வுலகிலுள்ள எல்லா வஸ்துக்களையும் மாறிக் கொண்டிருப்பதாகவே படைத்திருக்கின்றாய்.

மேலும், மாறிக்கொண்டே இருக்கும் வஸ்துக்களுக்கு ஏற்ப என்னையே மாற்றிக்கொண்டே இருந்தால் தான் நான் அதை ரசிக்க முடியும் என்பதால் என்னையும் குழந்தைப்பருவம், இளமைப்பருவம், முதுமைப் பருவம் என்று என்னை மாற்றிக் கொண்டே இருக்கின்றாயோ கண்ணா!!." இப்படி கண்ணன் ஒவ்வொரு நொடியும் எனக்கு புதுப்புது சுவைகளை கொடுத்துக்கொண்டே இருக்க வேண்டும் என்பதற்காகவே இப்படி மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன என்ற இந்த மாயா தத்துவத்தைப் புரிந்து கொண்டால், நான் எத்தனை ஆனந்தமாக வாழலாம்.

## ***நுண்ணுயிர்களின் வடிவில் கண்ணன் காட்டும் அன்பு.***

நான் சயின்ஸ் அண்ட் டெக்னாலஜி சென்டர் சென்றபோது நுண்ணுயிர்களின் பங்கு என்ற தலைப்பில் ஒரு பேனர் (banner) பார்த்தேன் அப்போது எனக்கு தோன்றியவை.

"கண்ணா!!, அன்பில் நான் என்ற அகங்காரத்திற்கு இடமில்லை என்பதை நான் அறிவேன். நீ என்னிடம் அன்பு செய்ய வரும் போதெல்லாம் நீ எத்தனை பெரியவனாக இருந்தும், என்னை உன் சரிநிகர் சமானமாக கருதி என்னோடு நீ விளையாடுவதை கண்டு ஆனந்தப்பட்டு இருக்கின்றேன். ஆனால்,

விஸ்வரூபியாகிய நீ, என் கண்களால் கூட காண முடியாத அளவிற்கு ஒரு சிறு ரூபத்தைத் (நுண்ணுயிர்) எடுத்ததோடு மட்டுமல்லாமல் அந்த ரூபத்தில் நீ எனக்காக செய்யும் காரியங்கள் வியப்பை அளிக்கின்றன. நீ கொடுத்த பழங்களையும் காய்களையும் உண்டு விட்டு நான் வெளியேற்றும் மல மற்றும் காய்கறி கழிவுகள் என்னை பாதித்து விடக்கூடாது என்பதற்காக, அதை மக்க வைக்கும் மகத்தான வேலையை நீ அந்த ரூபத்தில் இருந்து கொண்டு செய்கின்றாய் என்று புரிந்து கொண்டேன். அதுமட்டுமா?, காற்றில் இருக்கும் நைட்ரஜன் சத்தை பிரித்து செடிகளின் வேர்களுக்கு கொடுத்து ஒரு உரத் தொழிற்சாலையை இலவசமாக எங்களுக்காக இந்த நுண்ணுயிர் ரூபத்தில் நீ செய்கின்றாய் என அறிந்தேன். கண்ணா எங்களின் கழிவுகளை ஏற்றுக் கொண்டு அதற்கு பதிலாக சத்தான, சுவையான பழங்களை தருகிறாய் என்று உன்னை புரிந்து கொண்டபோது, விண்ணை முட்டும் உன் அன்பில் நான் கரைந்து விட்டேன் என்றே கூறவேண்டும். நுண்ணுயிர் ரூபத்திலே நீ காட்டும் அன்பை நான் புரிந்து கொண்ட பிறகும் கூட, என்னுள் அஹங்காரம் எழுமேயானால், என் உயிர் அந்தக் கணமே பிரிய வேண்டும் கண்ணா!!

## ***<u>சென்னையில் உள்ள ஒரு மிகப்பெரிய ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் செல்லும்போது கண்ணனை நான் கண்டு ரசித்தது.</u>***

கண்ணா அனைத்தும் உணர்ந்தவன் நீ, பேரறிவாளன் நீ, ஆனால் என்பால் நீ கொண்ட அன்பால் எத்தனை முட்டாள் வேடங்களில் கூட வருகின்றாய்!!, முட்டாள் தனம் என்றால் என்னவென்று நான் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவும், நீ என்னை சிரிக்க வைப்பதற்காகவும், இப்படியும் வருகின்றாய் என்று புரிந்துகொள்கிறேன் கண்ணா.

வெறும் 100 ரூபாய் பொருளை ஆயிரம் ரூபாய் கொடுத்து வாங்குகின்றாய்!!, சரி தாராள மனம் படைத்தவன் போல் என நினைத்தால் நீயோ பத்து ரூபாய் செலவு செய்யவும் அழுகின்றாய். வெட்டி பந்தாவுக்காக, மனமே இல்லாமல் நீ செலவு செய்வது வேடிக்கையாய் இருந்தது. மேலும் நீ என்னை சிரிக்க வைப்பதற்காக ஒரு குண்டு பெண்மணி வேடத்தில் வந்தாய் . அழகான கால்கள் உள்ள பெண்கள் ஷார்ட்ஸ் போட்டு வருவார்கள். ஆனால் பாவம் அடுத்தவர்களை கவர வேண்டும் என்ற நோக்கத்தில் குண்டு பெண்மணி டவுசர் போட்டு வரவே மிகவும் சிரிப்பாய் இருந்தது. உன்னை எல்லோரும் வியப்பாய் பார்த்தார்கள், ஆனால் நீ எதிர்பார்த்தது போல் அல்ல!!!. ஆனால் எனக்கோ குண்டு பெண்மணியும் நீ போட்ட வேஷம் அல்லவா!!, ஆதலால் என் கண்களுக்கு எல்லாமே அழகாகத் தான் தெரிந்தது கண்ணா!! அதனால் நான் மிகவும் ரசித்தேன். உண்மையில் மெகாவான (விஸ்வரூபனான) நீ எனக்காக மைக்ரோ (நுண்ணுயிர்) ரூபத்தில் வந்தாய் என்றால், இன்டலக்ட் (பேரறிவாளன்)ஆன நீ

இக்நோரண்ட் (அறியாமை) ரூபத்திலும் வருகிறாய் என்று புரிகின்ற போது உன் அன்பை நான் மறப்பேனோ?"

## ***நான் பத்ரிநாத் கேதார்நாத் சென்ற போது நான் கண்ட விஸ்வரூப தரிசனம்.***

கண்ணா, என் கண்களுக்கு விருந்தளித்து இயற்கை என்னும் பெயரில் உன் எழிலை நான் கண்டபோது உன் அன்பை வர்ணிக்க வார்த்தைகளை தேடுகின்றேன் கிடைக்கவில்லையே!!. மலைகளிலே பஸ் பயணம் செய்யும் போது அழகான வான் முட்டும் மலைகள்; எங்கு பார்த்தாலும் ஒரே பசுமை; அடிவாரத்தில் இருந்து உச்சிவரை  பேருந்து செல்லும் பாதை அருகே பெரிய நீரோடை;  ஆங்காங்கே நீர்வீழ்ச்சிகள் என அத்தனையும் ரசிக்க கண்கள் கோடி வேண்டும் கண்ணா!! நதிகளில் தான் எத்தனை விதம்!!  ஒன்றில் அமைதியாய் ஆரவாரமின்றி செல்கிறாய்; மற்றொன்றில் ஆர்ப்பரித்து ஆக்ரோஷமாய் செல்கிறாய்; அதேபோல் நீர் வீழ்ச்சியிலும் சிறிதும் பெரிதுமான எத்தனை விதமாய் காட்சியளிக்கின்றாய்!!  எனக்குள் ஒரு சந்தேகம் வந்தது. மலைகள் குறுக்கும் நெடுக்குமாய் பலவிதமாய் இருக்கின்றது, நதிகளும் விதவிதமாய் செல்கிறது, ஆனால் என் கண்களுக்கு ஏன் அத்தனையும் அழகாக தெரிகின்றது என்று. பிறகுதான் புரிந்தது உலகிலேயே அழகானது அன்பல்லவா! அந்த அன்பின் சொரூபமாய் இங்கே காண்பது அனைத்தும் என் கண்ணன் அல்லவா!! பின் அனைத்தும் அழகாக தானே தெரியும் என்று. கண்ணன் வந்து என்னை தடவிக் கொள்வதும் , குளிர்ந்த காற்றாக என்னை வருடி கொள்வதும், நான் மறக்க முடியாத அன்பு நினைவுகள். என்னவென்று சொல்வதம்மா? என் கண்ணனவன் பேரழகை!! சொல்ல முடியில்லயம்மா!! கொஞ்சி வரும் பேரழகை!! அந்த நீல நிறத்தவனை என் நெஞ்சில் நிறைந்தவனை..... என்ற பாடல் வரிகளை முனுமுனுத்தவாறு பயணம் செய்தேன்.

## ***கண்ணன் அன்பின் உச்சம் என்று நான் உணருவது, சுதந்திரமாக சிந்திக்கும் ஆற்றல் படைத்த மனம் என்று மாபெரும் வரத்தை எனக்காக கொடுத்ததுதான்.***

இறைவா, உன்னில் ஒரு சிறு துரும்பாய் நான் இருந்தபோதும், நான் பெரிதும் மகிழ்வதற்காக, அதுவும் என் விருப்பப்படி மகிழ வேண்டும் என்பதற்காக எனக்கு சுதந்திரமாய் சிந்திக்கும் ஆற்றல் கொண்ட மனம் என்ற வரத்தை கொடுத்ததுதான் உன் அன்பின் உச்சமாக நான் நினைக்கின்றேன். நீ சொல்கிறாய், "விஸ்வரூபமாய் நான் விரிந்து விட்டேன், இனி சுதந்திரமாய் உன் இஷ்டப்படி என்னை அனுபவிக்கலாம் என்று". மேலும் நான் நினைக்கும் அனைத்தும் எனக்கு  நடத்தித்  தருகிறாய். நியூட்டனின் மூன்றாம் விதியின் கீழ்

உன்னை மறவாமல் உன்னிடம் அன்போடு விளையாடினால், என்னிடம் அன்பு மழை பொழிந்து ஆனந்தம் தருகிறாய்; அறியாமையால், எனக்காக நீ கொடுக்கும் சவால்களை புரிந்து கொள்ளாமல் உன்னை வெறுத்து விளையாடினால் நீ முழுமையான அன்போடு, ஆனால் என்னை வெறுப்பது போல் நடித்து விளையாடுகிறாய்; அறியாமையால் எனக்கு உன்னை ரசிக்க தெரியாமல் வெறுப்பு என்ற துக்கம் வந்துவிடுகிறது. இதில் கூட உன் அன்பை கண்டு ஆச்சரியப்படுகிறேன். ஏன் தெரியுமா?, அறியாமையால் நான் உன்னை மறந்து, உன்னையே வெறுத்து, நீ கொடுத்த சுதந்திரத்தை மிஸ் யூஸ் செய்தபோது, என்னை நீ கண்டுகொள்ளாமல் விட்டிருக்கலாம் அல்லது நீ எனக்கு கொடுத்த சுதந்திரத்தை பறித்துக் கொண்டிருக்கலாம். ஆனால், என் மேல் கொண்ட அன்பால் நீ அப்படிச் செய்யவில்லை.

மாறாக, அப்போதும்கூட நான் கேட்டதையெல்லாம் கர்மாவின் அடிப்படையில் தகுந்த காலம், நேரம் பார்த்து நீ நிறைவேற்றி தருகின்றாய். உன்னை மறந்து நான் கேட்கும் அனைத்தும் EGO வுடன் இருப்பதால், அது எனக்கு திருப்பிக் கொடுக்கும்போது துக்கம் கொடுக்கிறது. அதன் மூலம் என் தவறை உணர்வதற்கும், EGO வை உதறிவிட்டு அன்பில் வாழ்வதற்கும் எனக்கு ஒரு பாடமாக இருக்கிறது. நான் உன்னை மறந்தாலும், நீ அன்பு செய்து கொண்டேதான் இருக்கின்றாய் என்கின்ற இந்த உண்மைகளை எல்லாம் நான் உணரும் போது, உன் அன்பில் நான் என்னை இழந்து விடுகின்றேன். மேலும் சிந்திப்பதும் அனுபவிப்பதும் மட்டுமே நான் செய்தால் போதும் . நான் சிந்திப்பதை நிறைவேற்றும் வேலையை நீயே செய்கின்றாய். ஏன் சிந்திப்பதற்கு கூட உண்டான சக்தியை நீயே தருகின்றாய். கண்ணா, உன்னை மறவேன்.. மறவேன்...

## ***பாரதியின் அச்சமில்லை அச்சமில்லை பாடல் வரிகள்.***

பாரதியாரின் அச்சமில்லை அச்சமில்லை என்ற பாடல் வரிகளை நான் படித்தபோது எனக்குள் ஏற்பட்ட உணர்வுகள்:

***"இச்ஜகத்துள்ளோரெல்லாம் எதிர்த்து நின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே"***

ஜகம் முழுவதும் நிறைந்திருப்பது என் கண்ணன் அல்லவா!!, ஜகத்தில் உள்ள எல்லா வேடங்களிலும் உள்ள என் கண்ணன் என்னை எதிர்க்கிறான் என்றால், ஒரு புதுவிதமான விளையாட்டிற்கு என் கண்ணன் அழைக்கிறான் என்றல்லவா அர்த்தம். மிகவும் ஆனந்தமாக புது விளையாட்டிற்கு தயாராவேனே தவிர என் கண்ணனிடத்தில் எனக்கு அச்சமா!! அன்பே உருவான என் கண்ணனிடத்தில் அச்சம் தேவையில்லை என்று ஒருவர் சொல்லத்தான் வேண்டுமா? என் கண்ணனை மறவாது இவ்விளையாட்டில் ஆனந்தமாக

விளையாடுவதே என் மிகப்பெரிய வெற்றியே தவிர, மற்றும் இதில் என் உயிர் பிரிந்தாலும் அல்லது இந்த விளையாட்டில் நான் வென்றாலும் அது ஒரு பொருட்டே அல்லவே!!

*"துச்சம் என்று எண்ணி நம்மைத் தூறு செய்த போதினும் அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே"*

கண்ணன் ஒருவனே பஞ்ச மஹா பூதங்களாகவும், உலகத்தில் உள்ள எல்லா ரூபமாகவும் வீற்றிருக்க, அவனுக்கு முன்னால்  நான் துச்சம் என்பது உண்மைதானே. துச்சத்தைத் துச்சம் என்று எண்ணுவதில் தவறென்ன இருக்கிறது. என் உள்ளும் புறமும் கண்ணனே நிறைந்திருக்க, துச்சம் என்று எண்ணப் போவதும் என்  கண்ணன் தானே. அதுவும்கூட அவனின் மாயா விளையாட்டுக்காகத் தானே. இதற்கும் நான் அச்சம் கொள்வதற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது.

*"பிச்சை வாங்கி உண்ணும் வாழ்க்கை பெற்று விட்ட போதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே"*

இந்த வாழ்க்கையே எனக்கு என் கண்ணன் போட்ட பிச்சைதானே. குறிப்பாக , பஞ்சபூதங்களாக உருவெடுத்திருக்கும் கண்ணன் போடுகின்ற பிச்சையால் தான் நான் வாழ்ந்து கொண்டு இருக்கின்றேன். இதில் எல்லா வேடத்தில் இருக்கும் கண்ணனிடம் பிச்சை வாங்கி உண்ணும் ஒரு விளையாட்டை கண்ணனோடு விளையாட நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும். இதற்குப் போய் யாராவது  அச்சம் கொள்வார்களா?

***இந்த சூழலை கண்டு அஞ்ச வேண்டாம் அந்த சூழலை கண்டு அஞ்ச வேண்டாம் என்று கூறி ஒவ்வொன்றாக அந்தப் பாடலில் சொல்லியதை விட, ஒரு மனிதனின் சுகத்தையும் துக்கத்தையும் நிர்ணயிப்பது மனமா அல்லது சூழலா? என்ற கேள்விக்கு என்னுடைய பதில்***.

கண்டிப்பாக மனம்தான். இதில் என்ன சந்தேகம்? கண்ணனையும் அவன் அன்பையும் புரிந்து கொண்டு, அவனை மறவாதிருக்கும் மனம்  என்றும் பேரானந்தத்தின் உச்சத்திலேயே தான் இருக்கும். மாறாக கண்ணனை மறக்கின்ற மனதிற்கு சூழல் சுவர்க்கமாகவே இருந்தாலும்,  நரகமாகவே தான் இருக்கும்.

## ***முதலில் நான் ஒரு ஞான யோகியாக இருந்து பின் பக்தனாக மாறியதின் காரணம்.***

நான் முதன்முதலில் பகவத்கீதையை ஆய்வு செய்தது கண்ணனிடத்தில் உள்ள பக்தியினால் அல்ல. வாழ்க்கை என்றால் என்ன? மனம் என்றால் என்ன? சந்தோஷம் எங்கே இருக்கிறது? என தெரிந்து கொள்வதற்காகவே ஆய்வு

செய்தேன். ஆய்வின் முடிவில் அனைத்தும் கண்ணனே என்றும், அவனின் மிதமிஞ்சிய அன்பையும் புரிந்த போது, என்னையும் அறியாமல் தானாக கண்ணன் என் மனதில் நிறைந்து விட்டான். இதுவே உண்மை.

இனி எனது ஞானப் பாதையின் விவரம். முதன்முதலாய் நான் கீதையை ஆய்வு செய்த போது ஒரு மனிதனின் சுகத்திற்கு காரணம் மனமா? சூழலா? என ஆராய்ந்து, மனம் தான் என்று ஆணித்தரமாக புரிந்து கொண்டேன். ஆனாலும், பல இடங்களில் என் மகிழ்ச்சியை இழக்கக் காரணம் நானே என்பதை மறந்து, அகங்காரத்தால் அடுத்தவர்களை குறைக் கூறிக் கொண்டு இருந்தேன்.

அடுத்ததாக மனதில் உள்ள விருப்பும் வெறுப்பும் என் துக்கத்திற்கு காரணம் என்றும், அனைத்தையும் சமநோக்கு பார்வையோடு பார்த்தால் அதாவது அனைத்தும் ஒரு சுவை என்று நினைத்தால் சந்தோசமாக வாழலாம் என புரிந்து கொண்டேன். ஆனால் ஓரளவுக்கு தான் இதில் வெற்றி கிடைத்தது. ஒரு சில இடங்களில் சுவையாக ஏற்க என் மனம் மறுத்தது.

மேலும் கற்றுக் கொண்ட ஞான விஷயங்கள் மேல் மனதில் பயிற்சி செய்து கொண்டே இருந்தால் அது ஆழ்மனதிற்கு சென்று விடும். அப்போது தான் ஞானம் இயல்பாக அனுபவிக்க முடியும் என்று புரிந்து கொண்டேன். ஆனால் என்னதான் மேல் மனதால் பயிற்சி செய்தாலும், கற்றுக்கொண்ட ஞானமானது முழுமையாக ஆழ்மனதிற்கு செல்லாமல் அவ்வப்போது ஆழ்மனதின் தாக்கத்தினால் கஷ்டப்பட்டேன்.

அடுத்ததாக என் சுகமும் என் துக்கமும் நான் செய்யும் நல்வினை மற்றும் தீவினையால் தான் ஏற்படுகின்றது என்றும், ஆதலால் நல்வினைகள் மட்டும் செய்து ஆனந்தமாய் வாழ வேண்டும் என்று கற்றுக் கொண்டேன். இந்த ஞானம் கற்றுக்கொண்ட பிறகும் கூட அவ்வப்போது தீவினைகளை செய்து கொண்டுதான் இருந்தேன்.

மேலும் பிரம்ம சூத்திரம் என்ற பெயரிலே இவ்வுலகனைத்தும் ஒன்றே, அது நான் மட்டுமே, என்று புரிந்து கொண்டேன். ஆனாலும் ஏனோ என் மனம் "அனைத்தும் நான்" என்பதை ஏற்று அனுபவிக்க மறுத்தது.

இப்படி அனைத்து ஞானத்தையும் புரிந்து கொண்டாலும், அனுபவிக்க சிரமப்பட்டுக் கொண்டிருந்த போது, அதே பிரம்மசூத்திரம் என்ற ஞானத்தை ஞானமாக இல்லாமல் அதாவது "அனைத்தும் நானே" என்று இல்லாமல் அதே பிரம்ம சூத்திரத்தை பக்தியாக அதாவது "அனைத்தும் கண்ணனே" என்றும், அவனின் ஒரு சிறு துளியாக நான் இருக்கின்றேன் என்றும், அந்தக் கண்ணனின் விஸ்வரூப நோக்கம் என்னோடு விளையாடி என்னிடம் அன்பு காட்டி மகிழ்விப்பது மட்டுமே என்றும் நான் புரிந்துகொண்டேன். மறுகணம் கற்ற ஞானத்தை எளிதாக அனுபவிக்க ஆரம்பித்தேன்.

சூழல் எத்தனை மோசமாக இருந்த போதிலும் கண்ணா!! அனைத்தும் நீ.. அதுவும் எனக்காகவே என்னோடு விளையாட வருகின்றாய்..என்று புரிந்த மாத்திரத்தில் அது சொர்க்கம் ஆகிறது.ஆதலால் சூழலால் துக்கம் என்பது வாய்ப்பில்லாமல் போனது.

அடுத்ததாக விருப்பு வெறுப்பு எதுவுமின்றி அனைத்தும் ஒரு சுவையாக அனுபவிக்கவேண்டும் என்ற ஞானத்தை பொறுத்தவரை , அனைத்தும் கண்ணன்என்றாகிவிட்ட பிறகு, மேலும் அவனது வானளாவிய அன்பை கண்ட பிறகு, அவனிடத்தில் ஆசை அதிகமாகி, அவனை அணு அணுவாய் மனம் ரசிக்கத் துடிக்கின்றதே.. விளைவாக, என் கண்ணன் காரமாய் இருந்தாலும் கசப்பாய் இருந்தாலும், என் கண்ணன் வருகின்றான் என்ற நினைப்பில் அற்புதமாக உன்னை நான் ரசிக்க முடிகிறது. கண்ணன் என்று நினைத்த மாத்திரத்தில் அனைத்தும் சுவை என்பது ஆட்டோமேட்டிக்காக அனுபவம் ஆகிறது என்பது உண்மையல்லவா.

மேல் மனதில் இருக்கின்ற ஞானமானது ஆழ்மனம் செல்ல வேண்டும் என்றால், ஆழமான எமோஷனல் போர்ஸ் (emotional force) உணர்வு தேவைப்படுகின்றது. அது உன் பக்தியால், உன் மேல் காதல் உணர்வினால், எனக்கு சுலபமாக கிட்டியது. விளைவாக , கற்றுக்கொண்ட ஞானம் மிக விரைவாக ஆழ்மனம் சென்றது. விளைவாக, என் பழைய அஞ்ஞான ஆழ்மன எண்ணங்கள் அடியோடு அழிந்து விட்டன.

நல்வினைகளை மட்டுமே செய்ய வேண்டும், தீவினைகளை செய்துவிடக்கூடாது என்று எச்சரிக்கை உணர்வோடு இருக்க வேண்டிய ஞானம் எனக்கு அவசியம் அற்றுப் போனது. "அனைத்தும் கண்ணன்" என்று நினைத்த மாத்திரத்தில், அவனின் கடலாகிய அன்பிலே நீந்திய பிறகு, எனது அகங்காரம் அடியோடு அழிந்தது. அவன் அளவுக்கு இல்லை என்றாலும் நானும் அன்பாய் மாறிவிட்டேன். ஆதலால் நான் செய்யும் செயல்களைப் பற்றியும், அதன் விளைவுகள் பற்றியும் எனக்கு கவலையே இல்லை. ஏனென்றால் அவனை நினைத்துக்கொண்டு அவனுக்காக நான் எதைச் செய்தாலும் அது தானாகவே நல்வினை ஆகிவிடுகின்றது.

இப்படியாக அன்பின் ஸ்வரூபமே கண்ணா... உன் அன்பை புரிந்து கொண்டு உன் பக்தனாக மாறிய மாத்திரத்தில், என்னையும் அறியாமல் கற்றுக்கொண்ட அத்தனை ஞானமும் எனக்கு சுலபமாக கிடைத்து போனது. மேலும் உன்னை நினைக்கும் வரை, உன் அன்பில் நனைந்து பேரானந்தத்தில் திளைக்கும் வரை, எனக்கு வேறு எதுவுமே தேவையில்லை கண்ணா..

## ***<u>நான் கட்டி அணைத்து மகிழ காதலனாக வந்த எனது கிருஷ்ண ரூபம்.</u>***

என் கண்ணா...நீயே பரப்பிரம்மமாய், விஸ்வரூபமாய், பல்லாயிரம் ரூபங்களாய் வந்து உன் அன்பை எனக்கு காட்டுகின்றாய். அதனால் உன்னை கட்டி அணைத்து ஆலிங்கனம் செய்து ஆனந்தப்பட துடிக்கும் எனக்கு வழி இல்லாமல் தவித்தேன். என் தவிப்பை புரிந்து கொண்டு, உனது விஸ்வரூப அன்பினை எள்ளளவும் குறையாமல், அந்த விஸ்வரூபமே கிருஷ்ண ரூபமாக, அவதார மூர்த்தியாக, அந்த CORE ஆன கண்ணனே ஒரு ROLE ஆக, வேஷத்தில் கூட முழுமையான அன்புடனே நீ எனக்காக வந்தாய். ஞானேஸ்வரி என்ற உன் கீதையை நீ எனக்கு கற்றுக் கொடுக்கும் போது எனக்கு குருவானாய். பின் இறுதியாக நான் உன்னை சரண் புகும் போது நீ என் காதலன் ஆனாய். அதன் பிறகு காதல் மயக்கத்தில் இன்றளவும் நான் அடையும் ஆனந்தத்திற்கு எல்லையே கிடையாது.

உருவமில்லாத, நிர்குணமான, பரபிரம்ம, பரமாத்மாவாகிய, இறைவனான உன்னை அனுபவிக்க என்னால் இயலாது என்றே என் அளவிற்கு ஒரு ரூபத்தோடு கூடிய குருவாய் வந்தாய். குருவான உன் அன்பிலே நெகிழ்ந்தேன். உனது அன்பையும் உனது ஆனந்தத்தையும் கண்ட பிறகு உன்னிடத்தில் சரணாகதி செய்வது எனக்கு மிகவும் எளிதானது. பின் நான் யாரென்றும், நீ யாரென்றும், இந்த பேருண்மைகளை எனக்குப் புரிய வைத்தாய்.

பின் என் குருவான நீயே, இந்த உலகத்தில் உள்ள எல்லா ரூபங்களாக வேஷம் ஏற்றுக்கொண்டு என்னோடு விளையாட வருகிறாய் என்று நான் புரிந்து கொன்ட போது, கண்ணா! உன் வியாபக தன்மையில் சரணாகதி ஆவது எளிதானது. இப்படி குருவிடம் சரணாகதி ஆகாமல் நிர்குண(உருவமற்ற) பரப்பிரம்மத்திடம் சரணாகதி ஆவது என்பது சாத்தியமே இல்லை. உனது (குருவின்) வியாபகத் தன்மையை நான் புரிந்து கொள்கின்ற போது , உன்னிடம் (குருவிடம்) நான் செய்த சரணாகதியே அந்த பரப்பிரம்ம பரமாத்மாவிடம் சரணாகதி செய்ததற்கு சமம் ஆகிறது. ஏனென்றால் எனக்கு குருவும், இறைவனும், காதலனும் நீயே ஆகின்றாய்...

## ***ஒருநாள் அதிகாலையில் கண்ணனை நினைத்தவாறு குளியலறை சென்றேன் அப்போது நான் அனுபவித்தது,***

கண்ணா! உன்னில் மிகவும் சிறியவனான நான் பல் துலக்குவதற்கு சுலபமாகவும் சுகமாகவும் இருக்க வேண்டும் என்பதற்காகவே ஒரு டூத் பிரஷ் வடிவத்தை எடுத்துக் கொண்டாயோ!! ஒரு டூத் பிரஷ் என் கைகளில் மிளிர, நீ எத்தனை பணி செய்கின்றாய் என்று நான் எண்ணிப் பார்க்கின்றேன். நீயே பல ஆயிரம் தொழிலாளர்கள் வேடமேற்று, பல அதிகாரிகள் வேடமேற்று, பல இயந்திரங்களாக உருமாறி, ஆராய்ச்சிக்கூடம், தொழிற்சாலையாக மாறி எனக்கு டூத் பிரஷ்ஷை தந்துள்ளாய் கண்ணா!! மேலும் நான் பல் துலக்குவதை

உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருந்தாயோ!! நான் ஏதேனும் சிரமப்பட்டால் அதற்கான உபாயம் காண நினைக்கிறாயோ!! ஏனெனில் எட்டாத பகுதி எல்லாம் தொட்டு துலக்கிட வானவில் போல் வண்ண வரிசையாக வந்தாய். எனக்கு சரியாக பல் துலக்க தெரியாமல் என் ஈறுகளை பாழாக்கிக் கொள்வேன் என்று spring handle டூத் பிரஷ் ஆக வந்தாய். நான் அதிகமாக அழுத்தினாலும் ஈறுகள் பாதிக்காமல் பார்த்துக் கொண்டாய். அது மட்டுமா, தேய்ந்தவுடன் மாற்ற வேண்டும் என்று கூட தெரியாத மடையன் நான் என்று நீ தெரிந்து கொண்டு இண்டிகேட்டர் ப்ரஷ்ஷாக வந்தாய். இன்னும் zigzag brizzles என்று ஒரு சாதாரண பல்துலக்கும் விஷயத்திலேயே நீ என் மேல் காட்டும் அன்பைக் கண்டு அசந்து விட்டேன் கண்ணா!! இதேபோன்று டூத் பேஸ்ட் மற்றும் சுலபமாய் நான் அழுக்கு தீர குளிக்க சோப்பு என்று நீ எத்தனை வடிவில் வந்து நின்றாய். அடுத்ததாக நான் குளித்து முடித்து சுலபமாக ஆடைகளை அணிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக, நீ முதலில் ஒரு விவசாயி வேடம் ஏற்று, விதை விதைத்து, பருத்தியை அறுவடை செய்தாய். பின் பல தொழிலாளர்களாகவும், தொழிற்சாலைகளாகவும் மாறி, நூலாக பின் ஆடையாக மாறுகின்றாய். இவையெல்லாம் போதாதென்று உடைகள் எனக்கு கனகச்சிதமாக பொருந்த வேண்டும் என்று எண்ணி ஒரு டெய்லர் வடிவில் வந்து என்னை அளந்து கச்சிதமாக தைத்துக் கொடுக்கிறாய் என்று எண்ணும் போது ஒரு உடைக்குள் இத்தனை அன்பா என மலைப்பாய் இருக்கிறது கண்ணா!!

பின் மெதுவாய் சமையலறைக்குச் சென்றேன். மீண்டும் கண்ணனின் அன்பைக் கண்டு வியக்க ஆரம்பித்தேன். காய்கள், பழங்களை கண்டேன். ஒரு வாழைப்பழத்தை உருவாக்க ஒரு விவசாயியாக மாறி நீ நிலத்தை உழுது பயிரிட்டு, 10 மாதங்கள் பாதுகாத்து உருவாக்குகிறாய். பின் நான் இருக்கும் இடம் வந்து சேர பல வாகனங்களாக உருமாறி, பழத்தை கொண்டு வந்து, பின் ஒரு வியாபாரியாக வேடமேற்று, என் வீட்டிற்ககே கொண்டு வந்து கொடுக்கிறாய் என்றால் உன் அன்பை என்னவென்று சொல்வது.

இப்படியே, என் விருப்பத்திற்கு ஏற்ப செல்ல வேண்டிய இடமெல்லாம் செல்ல, எத்தனை வாகனங்களாக இருக்கிறாய். சென்ற இடத்தில் பசித்தால் பசியார, ஹோட்டல்களாக இருக்கிறாய். செல்லும் இடமெல்லாம் எனக்கு எந்தக் குறையும் ஏற்படாத வண்ணம் நீ காட்டும் அன்புக்கு தான் அளவே இல்லையடா!!

மேலும் வீட்டில் உள்ள எண்ணற்ற பொருட்களின் ரூபத்தில் டிவி, மிக்சி, கிரைண்டர், வாஷிங்மெஷின் என ஆரம்பித்து நான் உபயோகிக்கும் செருப்பு வரைக்கும் அனைத்தும் உன் ரூபம் அல்லவா!! இவைகளெல்லாம் கண்ணா..நீ என்னை மகிழ்விப்பதற்காக எடுத்து ரூபங்கள் தானே!! குறிப்பாக செல்போன், அன்பை பரிமாறிக்கொள்ள நீ கொடுத்த அற்புதப் பொருள் அல்லவா!!! இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம் உன் அன்பினை!!!

## ***சாராய பாட்டிலாக வந்த குறும்பு கண்ணன்:***

சாராய பாட்டிலாக வந்த குறும்பு கண்ணன் என்னைப் பார்த்து கேட்ட கேள்வியும் அதற்கு நான் கொடுத்த பதிலும்.

எந்த ரூபத்தில் வந்தாலும் என்னை ரசிக்கின்றாயே!! இப்போது சாராய பாட்டிலாக இருக்கும் என்னை நீ ரசிக்கலாமே. வந்து என்னை அனுபவிக்கலாமே என்று கேட்டான்.

கண்ணா!! எனக்கு குருவாய் வந்து கீதையிலே நீ எனக்கு கொடுத்த உபதேசம் என்ன தெரியுமா? "விருப்பு வெறுப்பு இல்லாமல், அனைத்தையும் சம **பாவனையோடு** அணுகி, மனதில் முழுமையான அன்பில் நிறைந்து, இவ்வுலகத்தில் உள்ள அத்தனை பேரையும் கொன்று குவித்தாலும் நீ பாவத்தை அடைய மாட்டாய்" என்பதே அது.

இதிலிருந்து, எது சரி? எது தவறு? என்பதற்கு விளக்கம் அளித்ததாக புரிந்துகொண்டேன். ஏனெனில் முழுமையாக அன்பில் நிறைந்து நின்று செய்யும் எந்த ஒரு செயலும், எனக்கும் சரி மற்றவர்களுக்கும்(உனக்கும்) சரி நன்மையே தருகிறது. மேலும், நான் என்ன செய்கிறேன் என்பதை விட, என்ன மனோபாவனையில் செய்ய வேண்டும் என்பதை புரிந்து கொண்டேன்.

எனவே சாராய பாட்டிலாக வந்திருக்கும் என் கண்ணா! கண்டிப்பாக உன்னையும் நான் அனுபவித்துக் கொண்டுதான் இருக்கின்றேன். ஆனால் நீ சொன்ன தத்துவத்தின்படி, எனக்கும் மற்றவர்களுக்கும் நன்மை தரும் விதமாக அல்லவா நான் உன்னை அனுபவிக்க வேண்டும். ஆதலால் ஹோமியோபதி துறையிலே உன்னை மருந்தாக பயன்படுத்தி அடுத்தவருக்கு (பற்பல வேஷங்களில் உள்ள உனக்கு) நன்மை செய்து நன்மை அடைகின்றேன். மேலும் விஷம் போன்ற வஸ்துக்களாகவும் நீயே வந்து இருக்கின்றாய். மலேரியா நோய் போன்றவற்றை பரப்புகின்ற கொசுக்களாக இருக்கும் உன்னை அழிப்பதற்காகத்தானே நீயே விஷ ரூபத்தில் வந்திருக்கின்றாய். Hand sanitizerஆக வந்து, என் கையில் உள்ள கிருமிகளை அழித்து நோய்களிலிருந்து என்னை காப்பாற்றுகிறாய். இதை நான் புரிந்து கொண்டு உன்னை எப்படி அனுபவிக்க வேண்டுமோ அப்படித்தானே அனுபவிப்பேன்!

மேலும் கண்ணா! வாழ்க்கை எனும் இந்த மாயா விளையாட்டில், என் எதிரிகளாக வருவதும் நீ என்பதை புரிந்துகொண்டு, ஆனால் உன்னை எதிர்த்து விளையாடித்தானே நான் உன்னை அனுபவிக்க வேண்டும்? கண்ணா, நீ எந்த ரூபத்தில் வந்தாலும், உன்னிடத்தில் துவேஷம் சிறிதும் இல்லாமல் உன்னை அனுபவிப்பேன் என்றாலும், எந்த ரூபத்தை எப்படி அனுபவிக்க வேண்டும் என்பதையும் நீ கற்றுக் கொடுத்து விட்டாயே கண்ணா!

# ***கண்ணனை மறக்க முடியாது.***

ஒருமுறை கீழ் திருப்பதியிலிருந்து மேல் திருப்பதிக்கு கால்நடையாக சென்ற போது எனக்குள் ஏற்பட்ட அனுபவங்கள்.

என்னோடு கூடவே நடந்து வந்து கொண்டிருந்த ஒரு குறும்பு கண்ணன் சோர்வடைந்து இருந்தபோது நான் சொன்னது," கண்ணா இப்போது நாம் எங்கே செல்கின்றோம் என்று தெரியுமா? கண்ணனை காண்பதற்கு. எப்படி செல்கின்றோம் என்று தெரியுமா? கண்ணன் முதுகின் மீது ஏறி கண்ணனைக் காண செல்கின்றோம். ஏனென்றால் இந்த மலையும் கண்ணனின் சொரூபம் அல்லவா!! கண்ணன் மீதேறி நடக்கும்போது நாம் சோர்வுற்று விடக்கூடாது என்பதற்காக வழிநெடுகிலும் எத்தனை கண்ணன்கள் நமக்காக உணவும், நீரும், இன்னும் பல உணவுகளையும் கொடுத்து உதவிக் கொண்டிருக்கின்றான் என்று பார்த்தாயா?

கண்ணன் தான் எங்கும் இருக்கிறானே!! பின் நாம் ஏன் மலைமீது ஏறிச் சென்று அவனைக் காண வேண்டும்? என்ற கேள்விக்கு இடமே இல்லை. காரணம், எங்கும் இருக்கும் கண்ணனை, எங்கும் சென்று நான் ரசிக்க வேண்டாமா? அதனால் தானே இப்படி வழிநெடுகிலும் இருக்கின்ற அந்த கண்ணனை, இயற்கை எழில் நிறைந்த மரங்களாய், மான்களாய் இன்னும் பல விதங்களில் இருக்கும் என் கண்ணனை முழுக்க நான் ரசிக்க வேண்டுமென்றால் இப்படித்தானே செல்ல வேண்டும்.

ஒன்றை புரிந்து கொள் கண்ணா, உலகமாய் விஸ்வரூபமாய் விரிந்து நிற்கின்ற கண்ணனை அனுபவிப்பதற்கு என்றே பிறந்தவர்கள் நாம். பொதுவாக ஆன்மீகவாதிகள் சொல்வார்கள், 'புலன்களை எல்லாம் அடக்கு' என்று. ஆனால் எவனொருவன் அனைத்தும் கண்ணன் என்று முழுமையாக புரிந்து கொண்டானோ, அவன் எந்த புலனையும் அடக்கத் தேவையில்லை. மாறாக காண்பதெல்லாம் கண்ணனாக கண்டு, கண்களை உன் இஷ்டம் போல் என் கண்ணனிடத்திலேயே விடு. கேட்பதெல்லாம் என் கண்ணனின் ஒலிகளாக கேட்டு அனுபவி. சுவாசிப்பதெல்லாம் என் கண்ணனையே என்று உன் மூக்குக்கும் விருந்தளி. இப்படி நாக்கு, ஸ்பரிசம் என்று வருபவை அனைத்தும் என் கண்ணனே என்ற முழுமையான புரிதலோடு புலன்கள் அனைத்தையும் கட்டவிழ்த்து என் கண்ணன் மேல் மேய விடு.

நமது பிறவிப் பயனை அடைவதோடு, பேரானந்தத்தோடு இப்போதே வாழலாமே" என்று கூறியவாறு கண்ணனை அனுபவித்துக்கொண்டே கண்ணனைக் காணச் சென்றோம். எனவே நம் கண்கள் கண்ணனைத் தவிர வேறு எதையும் காண முடியாத நிலையில், காதுகள் அவன் ஒலிகளைத் தவிர வேறு எதையும் கேட்க முடியாத நிலையில், அவனைத் தவிர வேறு எதையும் சுவாசிக்க முடியாத நிலையில், நமது தோல் அவனைத் தவிர வேறு எதையும் ஸ்பரிசிக்க முடியாத நிலையில், நமது நாக்கு அவனைத்

தவிர வேறு எதையும் சுவைக்க முடியாத நிலையில், அவனை மறப்பது சாத்தியமா?.

## ***கண்ணனின் அன்பிலே நான் அதிகமாக நெகிழுகின்ற இடம் அவன் எடுத்து வரும் நெகட்டிவ் வேஷங்கள் தான்.***

கண்ணனின் ஒரு சிறு முடிக்குக்கூட நான் ஒப்பானவன் அல்ல, என்னால் அவனுக்கு ஆகப்போவது ஒன்றுமில்லை என்ற போதும், என்னிடம் அன்பு காட்டி என்னோடு விளையாடி என்னை மகிழ்விப்பதற்காக, அவன் விஸ்வரூபமாய் வந்திருக்கின்றான் என்று எண்ணி எண்ணி மகிழ்கின்றேன். அவன் தன்னுடைய மாயா சக்தியால் சத்துவம், ரஜஸ், தமஸ் என்ற மூன்று கேரக்டர்களின் கலவையாக, எண்ணிலடங்கா வேடமேற்று என்னிடம் விளையாட வருகிறான். ஏன் தெரியுமா? ஒரு விருந்துக்குச் சென்றால் நமக்கு பருப்பு, காரக்குழம்பு , புளிக்குழம்பு, பாயாசம், இனிப்பு, தயிறு என்று பல சுவைகளில் பரிமாறுகிறார்கள். ஒரு சாதாரண விருந்தே பல சுவைகளில் இருக்க வேண்டும் என்று நாம் நினைக்கின்றோம். மேலும் பல கோடிகள் செலவு செய்து நம்மை மகிழ்விக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் எடுக்கப்படும் திரைப்படத்தில் கூட வில்லன்களும் காமெடியன்களும் இல்லாமல் நம்மை மகிழ்விக்க இயலாதல்லவா? அப்படி இருக்கும்போது, நம் கண்ணன் நமக்காக கொடுத்திருக்கும் இந்த வாழ்க்கை எனும் விருந்தில், அல்லது வாழ்க்கை எனும் திரைப்படத்தில், பல சுவைகளில் அல்லது பல கேரக்டர்களில் வந்து ஆனந்த வெள்ளத்தில் ஆழ்த்த வேண்டும் என்று நினைத்ததன் விளைவாகத்தான், கண்ணனே வில்லனாகவும் காமெடியனாகவும் ஹீரோவாகவும் வந்து பல்வேறு வேடம் ஏற்று விளையாட வருகின்றான். அதிக அளவில் அவன் அறியாமை வேஷம் ஏற்று இருப்பதின் காரணம் கூட என்னை அதிகமாய் சிரிக்க வைப்பதற்காக தானே. ஏனெனில் ஒரு சினிமாவில், அறியாமை வேடத்தில் நடிக்கும் காமெடியன்களால் தான் நான் அதிகமாக சிரித்து மகிழ்கிறேன்.

மேலும் குறிப்பாக கண்ணன், வில்லன் போன்ற நெகட்டிவான வேடங்களில் வரும்போது, அவரது அன்பை கண்டு என் மனம் மேலும் மேலும் நெகிழ்கிறது. காரணம், எனக்கு ஒரு காரமான சுவையை கொடுக்க வேண்டும் என்பதற்காகவும், என்னில் அன்பை வளர்த்து, மனோ பலத்தை வளர்த்து, என்னை ஒரு ஹீரோவாக்க வேண்டும் என்பதற்காகவும், அவன் எத்தனை கீழான வேடங்கள் ஏற்று வருகின்றான் என்று எண்ணிப் பார்த்தால் மலைப்பாக இருக்கிறது. ஏனெனில் அன்பின் சிகரமான கண்ணன் அன்பின் உச்சத்தில் இருந்து கொண்டு, ஆனால் கொஞ்சமும் அன்பு இல்லாதது போல பல கீழான வேடங்களில் நடிக்க வேண்டும் என்பது எத்தனை சவாலான விஷயம். இந்த உண்மை புரிந்த பிறகு, என் அன்பில் சிறிதும் குறைவில்லாமல் என்

கண்ணனை ஒருபோதும் மறக்காமல், அதே சமயத்தில், அவன் வில்லனாய் வரும் சமயங்களில் அவன் விருப்பப்படி அவனை எதிர்த்து விளையாடுகின்றேன். ஜெயித்தால் என் கண்ணனை மகிழ்வித்தேன் என்று மகிழ்கின்றேன். தோற்றால் என் கண்ணனிடத்தில் தானே தோற்றேன் என்று, விளையாட்டில் தோற்றாலும் கண்ணனை மறவாது முழுமையான அன்பில் விளையாடினேன் என்ற திருப்தியோடு திறமைகளை வளர்த்துக் கொண்டு,"மீண்டும் வெல்வேன் கண்ணா" என்று சவால் விடுகின்றேன்.

## ***விளையாட்டில் சண்டையும் ஒரு சுகமே என்று என் நண்பர்களின் வாயிலாக புரிந்து கொண்டபோது, கிருஷ்ணன் ஏன் என்னோடு விளையாடுகின்றான் என்பதை எண்ணி மகிழ்ந்தேன்.***

எனக்கு இரண்டு நண்பர்கள். இரண்டு பேருமே மல்யுத்த விளையாட்டில் சாம்பியன்களாக இருந்தார்கள். ஒருமுறை இருவருமே ஒரு போட்டியில் பங்கேற்ற போது, இறுதிப் போட்டியில் இருவருக்குமிடையே மல்யுத்தம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. உற்சாகமாக தயாரானார்கள். போட்டி விறுவிறுப்பாக நடந்தது. இறுதியில் ஒரு நண்பன் வெற்றி பெற்றான். ஆனால் அந்த வெற்றியை இருவருமே கொண்டாடி மகிழ்ந்தார்கள். பிறகு பத்திரிகை நிருபர்களிடம் அவர்கள் சொன்ன போது," இதுவரை எத்தனையோ விளையாட்டுக்கள் விளையாடி இருப்போம். ஆனால் இந்த விளையாட்டில் நாங்கள் அடைந்த மகிழ்ச்சி எங்கள் வாழ்நாளில் என்றும் அடைந்ததே இல்லை" என்று இருவருமே ஒன்று சேர்ந்து சொன்னார்கள். காரணம் கேட்டதற்கு, ஒவ்வொரு முறை என் நண்பன் வெற்றி புள்ளி பெறும்போதும் அதை எனது வெற்றியாக நான் மகிழும் அதே வேளையில், அவனிடத்தில் சவால் விட்டு அவனை வெல்ல முயற்சித்தேன். நான் வென்றாலும், என் நண்பனை உற்சாகப்படுத்தி," உன்னால் முடியும் என்னை வீழ்த்து" என்று ஆணையிட்டேன். இப்படி வெற்றி, தோல்வி இரண்டையும் சமமாக ரசித்து விளையாடிய இந்த விளையாட்டை நாங்கள் என்றென்றும் மறக்க முடியாது, என்று கூறியிருந்தார்கள். இதிலிருந்து நான் புரிந்து கொண்டது, அனைவரையும் கண்ணனாகவும் என் நண்பர்களாகவும் பார்த்து விளையாடும்போது சண்டையும் கூட இத்தனை சுகமா? என்று வியக்கின்றேன்.

மேலும் கோபம் போன்ற எந்த விதமான உணர்வுகளையும் நான் நசுக்க தேவையில்லை . அனைத்தும் கண்ணன் என்பதை மறவாமல் அதையும் அன்போடு வெளிப்படுத்தலாம் என்றால் அது எத்தனை சுலபம்.

***ஒரு முரட்டுக் கண்ணனுடன் எனது அனுபவம்:***

ஒரு முறை நான் மிதிவண்டியில் சென்னை அசோக் பில்லர் ஜங்ஷன் கிராஸ் செய்யும் போது ஒரு பஸ் அருகில் வந்துவிடவே அதிலிருந்து தப்பித்துக் கொள்ள எத்தனித்து சற்றே விலக அருகில் இருந்த இன்னொரு சைக்கிளில் பின் சக்கரத்தில் எனது சைக்கிளின் பெடல் பட்டு நிறைய போக்ஸ் கம்பிகள் உடைந்து விட்டன, உடனே நாங்கள் இருவரும் சற்றே ஒரு மரத்தடியில் ஓரமாக நிறுத்தி என்ன ஆயிற்று என்று நான் விசாரிக்க அதற்குள் வேக வேகமாக ஓடி வந்து எனது மிதி வண்டியை பூட்டி சாவியை கையில் எடுத்துக்கொண்டு," என்ன தைரியம் இருந்தால் எனது மிதிவண்டியின் எல்லா கம்பிகளையும் உடைத்து இருப்பாய், இதற்கு நீயே பொறுப்பு ஆதலால் எனக்கு 200 ரூபாய் கொடுத்தால் தான் நான் இந்த இடத்திலிருந்து உன்னை விடுவேன்" என்று மிரட்ட ஆரம்பித்தான். நானும் உண்மையில் அவருக்கு ஏற்பட்ட பாதிப்பை கண்டு வருந்தினாலும் என் கையில் வெறும் இருபது ரூபாய் மட்டும்தான் இருந்தது அதனால் அவரிடம்," என்னிடத்தில் இப்போது இவ்வளவு தான் இருக்கின்றது இதை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள்" என்று நான் கூறினேன்.

அதற்கவர்,"முடியவே முடியாது, 200 ரூபாய் கொடுக்காமல் இந்த இடத்தில் இருந்து உன்னை விடமாட்டேன்" என்று கத்தினார். உடனே கண்ணனின் நினைவுகள் என் மனதில் நிழலாடின. ,"கண்ணா நீ உன் விளையாட்டை ஆரம்பித்து விட்டாய் ஆனால் இந்த இடத்தில் நான் என்ன செய்யவேண்டும் என்று எனக்கு தெரியவில்லை ஆதலால் நான் அமைதியாக உனது லீலையை இனி வேடிக்கை பார்க்கப் போகின்றேன்" என்று மனதில் எண்ணியவாறு சற்றே ஒரு 5 அடி தள்ளி அமைதியாக அமர்ந்து கொண்டு நான் அவரை ஒரு முறட்டு கண்ணனாக பாவித்து வேடிக்கை பார்க்கலானேன்.

இதைக் கண்டு பொறுத்துக்கொள்ள முடியாத முரட்டுக் கண்ணன் அமைதி இழந்து போவோர் வருவோரை எல்லாம் அழைத்து அழைத்து," இங்கே பாருங்கள் இவர் செய்த காரியத்தை" என்று குமுரி கொண்டு," எனக்கு நியாயம் வாங்கித் தாருங்கள் அவரிடம் பணத்தை பெற்றுத் தாருங்கள்" என்று விண்ணப்பிக்க அரம்பித்தார் பின் அருகில் இருந்த ஒரு சைக்கிள் கடைக்காரர் கூட்டிக்கொண்டு வந்து, "எவ்வளவு செலவாகும் என்று நீங்களே அவரிடம் சொல்லுங்கள்" என புலம்பிக் கொண்டே இருந்தார்.

அந்த நேரத்தில் அது வரை வெயிலில் டிராபிக் வேலை பார்த்துக்கொண்டிருந்த கான்ஸ்டபிள் ஆசுவாசப் படுத்திக் கொள்வதற்காக நான் இருந்த மர நிழலில் என் அருகிலேயே வந்து அமர்ந்தார்.உடனே நானும் நடந்த விஷயங்களை எடுத்துக் கூறி என்னிடத்தில் 20 ரூபாய் தான் இருக்கின்றன இதை வாங்கிக் கொண்டு சாவியை கொடுங்கள் என்றால் அவர் சாவியை கொடுக்க மாட்டேன்

என்கிறார் என்ன செய்வது என்று எனக்கு தெரியாமல் உட்கார்ந்து இருக்கிறேன் என்று நான் கூற உடனே," முதலில் வா" என்று என்னை அழைத்துக் கொண்டு அவன் அருகில் வந்து," முதல்ல சாவியைக் கொடு" என்று அவனிடம் கேட்டார். அவனோ," இழப்பீடு தராமல் என்னால் சாவியை கொடுக்க இயலாது" என்று போலீசிடம் தெரிவிக்க போலீசிற்கு மிகுந்த கோபம் வந்துவிட்டது.," நடந்ததை எல்லாம் நான் பார்த்துக் கொண்டுதான் இருந்தேன் நீங்கள் இருவரும் உயிர் பிழைத்ததே பெரியது என்று நினைக்காமல் சின்ன விஷயத்துக்காக சண்டை போட்டுக் கொண்டு இருக்கிறாயே அறிவில்லையா உனக்கு" என்று அவனைத் திட்ட ஆரம்பித்தார். அவனோ இல்லை எனக்கு இழப்பீடு வேண்டும் என்று மீண்டும் கூற உடனே போலீஸ் மிகுந்த கோபத்துடன் ஒரு பேப்பரைக் கொண்டு வந்து என்னருகில் நீட்டி," ஒரு கம்ப்ளைன்ட் மட்டும் எனக்கு எழுதிக் கொடு அவனை உண்டு இல்லை என்று பண்ணி விடுகிறேன்" என்று சப்தமாக கூறினார். அவனோ மிரண்டு போனான். நானோ, கம்ப்ளைன்ட் எல்லாம் எதுவும் வேண்டாம் என்று நான் கூறிக் கொண்டிருக்கும் போது அவன் பயத்துடன் சாவியை மெதுவாக போலீசிடம் கொடுத்து விட்டான். உடனே அதை என்னிடத்தில் கொடுத்துவிட்டு," நீ வீடு செல்" என்று என்னை அனுப்பி விட்டார் நான் சாவியை எடுக்கும் அந்த சமயத்தில் பாவம் அந்த முரட்டுக் கண்ணன்," படித்தவனுக்கு என்றால் ஒரு நியாயம் பார்ப்பதற்கு படிக்காதவன் போல் தெரிகிறேன் என்பதற்காக இன்னொரு ஞாயமா? நாட்டில் நியாயமே கிடையாதா" என்று புலம்பியவாறு அவன் சைக்கிளை எடுத்துக் கொண்டு போனபோது நானோ" ஐயோ அந்த முரட்டு கண்ணனுக்கு இன்னும் மனசு ஆறவில்லையே" என்று ஆதங்கத்தோடு அதே சமயத்தில் கண்ணனின் லீலையை முழுமையாக அனுபவித்த திருப்தியில் வீடு வந்து சேர்ந்தேன்.

## ***உடல் வலியால் துடித்த போது என்னில் ஏற்பட்ட உணர்வுகள்.***

ஒரு முறை என் உடல் நோய் வாய்ப்பட்டு நான் படுத்திருந்தபோது, இதுவும் என் கண்ணனின் பிரசாதம் என்று முழுமையான உணர்வோடு அதை ஏற்று ரசித்துக் கொண்டிருந்தேன் ஆனால் அந்த வேளையில் திடீரென எனக்கு தலை வலி அதிகரிக்க ஆரம்பித்தது அது கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்து கொண்டே வர என்னில் அந்த கிருஷ்ண உணர்வு அதிகரித்துக்கொண்டே வந்தது "உன்னுடைய லீலை" என்று எண்ணி ஆனந்தமாக ரசிக்க முற்பட்டேன். ஆனால் வலி அதிகரிக்க அதிகரிக்க,"பொறுக்கமுடியவில்லை போதும் கண்ணா" என்று

சொல்லிவிட்டு அடுத்த கணம் என்னை கண்டு எனக்கே ஏளனமாக இருந்தது. காரணம் நீ (கண்ணன்) எதைச்செய்தாலும் என் நன்மைக்கே செய்வாய் என்ற உணர்வை மறந்து உனக்கே "போதும் கண்ணா" என்று அறிவுரை கூறியதால். மேலும் எனது பற்று எனக்கு உன்னிடத்தில் (கண்ணனிடத்தில்) இருப்பதை விட என் உடம்பில் இருக்கிறது என்பதை என் கண்ணா, நீ உணர்துகிறாய் என்பதை உணர்ந்தேன், பின் உன்னிடத்தில் என் பிடியை மிகவும் இருக்கச் செய்து கொண்டு இடைவிடாது உன் நினைவில் நின்ற போது, இந்த அளவுக்கு இறுகப் பற்றிக்கொண்டு இடைவிடாமல் நிற்க வேண்டும் என்று எனக்கு உணர்த்துவதற்காகவே என்னிடத்தில் இந்த லீலை செய்கின்றாயோ என்று உணர்ந்தேன்.

மேலும் நான் படித்த கதை ஒன்று என் நினைவிற்கு வந்தது. அந்தக் கதையில் முழுமையாகச் சரணாகதி செய்துவிட்ட பக்தன் ஒருவன் இறைவனிடத்தில் சவால் விடுகிறான்,"என்னை நீ எந்த அளவிற்கு சோதித்தாலும் அது உனது லீலை என்பதை மறவாமல் முழுமையான ஆனந்தத்தோடு வாழ்ந்து காட்டுவேன்" என்பதுவே அது. பகவானுக்கும் இப்படிப்பட்ட பக்தர்களுடன் விளையாடுவது என்றால் கொள்ளை பிரியம் அல்லவா!, விளைவாக பகவான் அந்த பக்தனை பல்வேறு இன்னல்கள் கொடுத்து சோதித்து பார்க்கிறார் ஆனால் அத்தனையிலும்,"கண்ணா, கண்டிப்பாக என் மகிழ்ச்சியை மட்டுமே உபதேசமாகக் கொண்டு நீ விளையாடும் இந்த விளையாட்டை நான் மறவேன்"என்று முழுமையாய் புரிந்து கொண்டு இவன் முழுமையான ஆனந்தத்தில் திளைக்கின்றான். சோதனையின் உச்சகட்டமாக அவனது வசிக்கும் வீடு நெருப்பு பற்றி எரிகின்றது இந்த நிலையிலும்கூட இதுவும் அவனது லீலை என்பதை முழுமையாகப் புரிந்து கொண்டு அந்த விளையாட்டில் தான் தப்பிக்க வழி இருக்கின்றதா என்பதை சோதிக்கின்றான் வழியில்லை என்று தீர்மானத்தவுடன் அந்த தீயினால் வரும் அந்த வேதனையை கூட முகத்தில் சிறிதளவும் எரிச்சல் கோபம் இல்லாமல் முழுமையான புன்னகையுடன் கிருஷ்ணானந்தை அதிகரித்த வாறு அவன் உடலை விட்டான் என்று அந்த கதை முடியும்.

இந்த கதையை நினைத்தவாறு நான் அந்த வேதனையை அனுபவித்தேன்.

## ***<u>கண்ணனோடு நான் ஆடிய ஒரு சுவாரஸ்யமான விளையாட்டு மற்றும் அதனால் நான் பெற்ற தைரியம்.</u>***

ஒரு நாள் நான் வீட்டில் இருக்கும் போது காவல் நிலையத்தில் இருந்து ஒரு காவல்காரர் வந்து என் பெயர் சொல்லி அழைத்தார். நான் வெளியில் சென்று,"

ஆம், நான்தான்" என்று சொன்னேன். அதற்கு அவர்," உன் மேல் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது. உடனடியாக நீ காவல் நிலையத்திற்கு வர வேண்டும்" என்று கூறினார்.

அதைக் கேட்ட மாத்திரத்தில் என் கண்ணனை நான் மறந்தேன். விளைவாக இதயத்துடிப்பு அதிகரித்தது. கை கால்கள் நடுங்க ஆரம்பித்தன. பயத்தில் இருப்பதை உணர்ந்தேன். கிருஷ்ண உணர்வில் இருக்க ஆரம்பித்த நாளில் இருந்து, எனக்கு இப்படி ஒரு பாரத்தை உணர்ந்ததே இல்லை. "என்ன ஆயிற்று எனக்கு" என்று ஒரு கணம் சிந்திக்க ஆரம்பித்த போது, என் கண்ணனை மறந்ததை உணர்ந்தேன். அடுத்த வினாடி எனக்குள் ஓடிய எண்ணங்கள்,"மன்னித்துவிடு கண்ணா, என்னை மன்னித்துவிடு.. எப்போதும் சவாலான விளையாட்டுகளே நீ என்னிடம் விளையாட வரவேண்டும் என்று நான் விண்ணப்பித்திருந்தும் கூட, ஒரு நொடியில் உன்னை மறந்தேனே. என் விருப்பத்திற்கு ஏற்ப ஒரு புதுவிதமான விளையாட்டிற்கு என்னை அழைக்கின்றாய் என்பதை புரிந்துகொள்ள மறந்தேனே. அதற்கு தண்டனையாக, இன்றைய போட்டியில் நீ எனக்கு பல சவால்களை கொடுக்க வேண்டும். குறிப்பாக எனது நியாயம் மறுக்கப்பட்டு , நான் அடி உதை பட்டு, சிறையில் அடைக்கப்பட வேண்டும். அத்தனையும் உனது விளையாட்டு என்றும், அத்துணை காவல்காரர்களும், ஏன் காவல் நிலையமும் நீயே என்பதை மறவாமல் ஆனந்தமாக ஏற்றுக்கொண்டு, உன்னை ரசித்து காட்டுவேன். ஏனெனில், நான் விளையாட்டில் வெற்றி பெறுவதை விட, உனது அன்பை மறவாமல் ஆனந்தமாக இருப்பதுவே உனக்கு மிகவும் பிடிக்கும் என்பதை உணர்ந்தவன் நான். எனவே ஓடோடி வருகின்றேன் கண்ணா, ஆனந்தமாய் விரைகின்றேன் கண்ணா" என்று எண்ணியவாறு மிகவும் உற்சாகத்துடன் காவல் நிலையத்துக்கு பயணமானேன்.

காவல் நிலையத்தில் என்னைப் பற்றிப் புகார் கொடுத்தவர் நின்று கொண்டிருந்தார். காவல் நிலைய அதிகாரி என்னைப் பார்த்ததும், புகார் கொடுத்தவரை நோக்கி," உங்கள் குற்றச்சாட்டுக்கு ஆதாரம் வேண்டும்" என்று கேட்டார். அதற்கு என்னை குற்றம் சாட்டியவர்," ஆதாரத்தை என்னால் தர இயலாது" என்று சொல்லவே, என்னைப் பார்த்த காவல் நிலைய அதிகாரி,"அவர் ஆதாரத்துடன் வந்தால் மீண்டும் உங்களை அழைக்க வேண்டி வரும். இப்போது நீங்கள் போகலாம்" என்று சொல்லி விட்டார். எதிர்பார்த்தது நடக்கவில்லை என்ற ஏமாற்றமே எனக்கு மிஞ்சியது. கிருஷ்ணனிடம் முறையிட்டேன்," இன்னும் நான் உன்னிடம் முழுமையாக சரண் புகவில்லையோ? கடுமையான சோதனைக்கு ஆளாக்கினால் நான் உன்னை மறந்து துயரப்படுவேன், தோற்று விடுவேன் என்று நினைத்தாயோ?"என்று அவனிடத்தில் சொல்லிவிட்டு வீடு திரும்பினேன்.

அன்று முதல் நான் கிருஷ்ணன் மேல் கொண்ட பக்தி பன்மடங்கு அதிகரித்தது. காரணம், அவனை மறந்த வேளையில் நான் அடைந்த துக்கமும், அவனை

நினைத்த மாத்திரத்தில் நான் பெற்ற தைரியமும் உற்சாகமும், எனக்கு அவன் கொடுத்த ஞானத்தின் மகிமையை மிக நன்றாக உணர்த்தியது.

## ***கொடூரமான வேடத்தில் நான்கு பேர் சேர்ந்து என்னை ரேப் செய்ய வந்தால்?***

மிகவும் திறமையான நடிகர்கள், நடிக்கும் போது அந்த கேரக்டராகவே மாறி விடுவார்கள் என்று பொதுவாகச் சொல்வதுண்டு. அதற்கு அர்த்தம், அவர்கள் தாங்கள் நடிகன் என்பதையே மறந்து அந்த கேரக்டர் ஆகி விடுகிறார்கள் என்பது அல்ல. தான் ஒரு நடிகன் என்பதை முற்றிலும் மறவாது இருக்கும் போதும், அதே நேரத்தில் வேடம் கச்சிதமாக இருக்க வேண்டும் என்பதற்காக, அந்த கேரக்டரோடு தன் மனதை பின்னிப் பிணைத்துக்கொள்வதால், அவர் துக்கப்படும் போது அங்கே ஒரு துக்ககரமான உணர்வு ஏற்படுகிறது. அந்த துக்கத்தை அற்புதமாக பிரதிபலிக்கும் அதேவேளையில், அவரிடத்தில் ஆனந்தம் எள்ளளவும் குறையாமல் இருக்கிறது. காரணம் இது உண்மையல்ல என்ற அந்த உண்மை, அடிப்படையில் அவரிடம் இருக்கின்றது.

எனவே, கிருஷ்ண உணர்வில், இது கிருஷ்ண மாய விளையாட்டு என்று முழுமையாகப் புரிந்துகொண்டு நான் அதை அனுபவிக்கும் போது, கிருஷ்ணனோடு நடக்கின்ற மாய விளையாட்டு என்ற ஆழமான ஒரு புரிதலோடு , அதே சமயத்தில் விளையாட்டை கனகச்சிதமாக செய்ய வேண்டும் என்று நான் விளையாடும் போது, அங்கே அந்த துக்ககரமான உணர்வுகளையே ஆனந்தம் குறையாமல் அனுபவிப்பேன். விளையாட்டில் ஏற்படும் வெற்றியோ தோல்வியோ ஒரு போதும் என்னை பாதிக்காது.

## ***மேலும் சில பக்தர்கள் தங்களது கிருஷ்ண உணர்வினை என்னோடு பகிர்ந்து கொண்டதில் சில.***

1) ஒருமுறை எனக்கு வாந்தி வந்தது. வாந்தி எடுத்தேன் அப்போது கண்ணனின் நினைவுகள் என் மனதில் நிழலாடின, அவனன்றி அணுவும் அசையாது செய்வதெல்லாம் அவனே என்பதை நான் அறிந்ததால் என்னில் ஏற்பட்ட உணர்வுகள். "நான் தகாத உணவுகளை உட்கொண்டு அறியாமையினால் நான் செய்யும் தவறுகளை கூட எத்தனை அழகாக நீ சரி செய்கின்றாய் இந்த உணவுகள் எனக்கு ஒற்றுக் கொள்ளாது என்பதை நீ புரிந்து கொண்டு அதை எத்தனை லாவகமாக வெளியேற்றி விடுகின்றாய், அப்போது வரும் நாற்றத்தை காணும்போதுதான் எனக்கே புரிகிறது இந்த உணவு என்னில் எந்த இடையூறும் செய்திடா வண்ணம் எனை காக்கவே நீ இதை செய்கின்றாய் என்று. இறைவா, உன் அன்பை என்றும் மறவேன்" என்று நான் சிந்தித்த போது அந்த வாந்தியினால்

ஏற்பட்ட சிரமம் மாறி அவனது அன்பிலே நெகிழ்ந்ததால் அது மிகப்பெரிய ஆனந்தமாக மாறியது.

2) கிருஷ்ண உணர்வுக்கு முன்னால் ரசனை என்றால் என்னவென்று தெரியாமல் வாழ்ந்து கொண்டிருந்தேன் இயற்கை ஆர்வலர்கள் ரசித்து ரசித்து எழுதும் கவிதைகளையும் பாடல்களையும் கண்டு எனக்கு வியப்பாக இருக்கும் ஆனால் என்ன ஆச்சரியம் கண்ணா, அனைத்தும் நீதான் என்றும் உன் அன்பினையும் புரிந்து கொண்ட பிறகு இயற்கை மட்டுமல்ல அனைத்தும் நீதான் என்பதால் அத்தனையும் எத்தனை அழகாக நான் ரசிக்க முடிகின்றது. ஒருமுறை குற்றாலம் சென்று மலைகளையும் அருவிகளையும் நான் கண்ட போது இத்தனை நாட்களாக உனது அழகை ரசிக்க மறந்ததை எண்ணி வருத்தப்பட்டேன். மேலும் அருவிகளில் குளிப்பதற்கு கூட ரசிக்க தெரியாமல் ஐந்து நிமிடத்தில் கல் போன்று என் தலையில் நீர் விழுகிறது என்று சொல்லி வெளியே வந்துவிடுவேன் ஆனால் இன்று, கண்ணா நீயேதான் அருவியாய் என் தலையில் விழுகின்றாய் என்று புரிந்ததும் எத்தனை அழகாக எண் தலை மற்றும் உடல் முழுவதும் நீ மசாஜ் செய்கிறாய் என்ற உணர்வின் ஆனந்தத்தில் அரை மணி நேரம் கூட விடாமல் அருவியில் குளித்து நான் ரசித்தேன் என்றால் அதற்குக் காரணம் அருவியும் நீ என்பதால்தான் கண்ணா. ஈரத் துணியில் வெகுநேரம் இருப்பதை சுத்தமாக ரசிக்க தெரியாத எனக்கு அதுவும் நீ தரும் உணர்வு தான் என்பதால் அதுவும் எனக்கு சுகமாக இருக்கின்றது.

இந்தப் புத்தகத்தை படித்த நண்பர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இதில் ஏதேனும் பிழை இருப்பின் மன்னித்து அருள வேண்டுகிறேன்.